ஏடாயிரங் கோடி..

முனைவர் அ.சே. சேக் சிந்தா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி

பீனிக்ஸ் கனவுகள் அலாதியானவை..

பீனிக்ஸ் (Phoenix) பறவை கழுகை விட பெரிதாக இருக்கக்கூடிய பறவை. இதனுடைய இறக்கைகள் சிகப்பு, தங்கம், ஊதா போன்ற நிறங்கள் கலந்திருக்கும். இதன் இறக்கைகள் பார்ப்பதற்கு நெருப்பை போல ஜொலிக்குமாம். இதனுடைய வால் நீல நிறத்தில் இருக்கும். பீனிக்ஸ் பறவையின் கண்கள் நீல நிறத்தில் ஜொலிக்கும் என்று சொல்லப்படுகிறது. இதனுடைய தலையில் கொண்டையும், தலையை சுற்றி ஒளி வட்டமும் இருக்குமாம். மொத்தத்தில் இந்த பறவை பார்ப்பதற்குக் கம்பீரமாக இருக்கும். பீனிக்ஸ் பறவை 500 முதல் 1500 வருடங்கள் வரை உயிர் வாழக்கூடியது என்று சொல்லப்படுகிறது.

இந்த பறவை தன்னுடைய ஆயுட்காலம் முடியும் போது வாசனை மிக்க மரக்கட்டைகளை வைத்து பெரிய கூடு ஒன்று கட்டி அதன் மீது உட்கார்ந்து தனக்கு தானே தீவைத்துக் கொள்ளுமாம். அதன் பிறகு அந்த சாம்பலில் இருந்து மறுபடியும் பிறந்து வரும். அப்படி பிறந்து வரும் போது முன்பைக் காட்டிலும் மிகவும் வலிமையாக இருக்குமாம். இதெல்லாம் உண்மையா? என்று கேட்டால் அதுதான் கிடையாது. ஏனெனில், பீனிக்ஸ் என்ற பறவை உலகத்திலேயே கிடையாது. பண்டைய எகிப்திய புராணக்கதையில் "பென்னு" என்ற பெயரில் முதல் முதலில் இந்த பறவை குறிப்பிடப்பட்டது. அந்த புராணக்கதை கிரேக்கத்திற்கு வரும்போது இந்த பறவையில் பெயர் "பீனிக்ஸ்" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. என்றாலும் இன்று வரையிலும் இது முயற்சியின் முழுமையான பரிணாமத்தையும் முன்னுரைக்கின்றது.

முயற்சியின் மேன்மை

முயற்சி திருவினை ஆக்கும். முயற்சி தான் விதியை மாற்றும் என்ற கருத்துடன் நெருங்கிய தொடர்புடைய பல இஸ்லாமிய கருத்துகள் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இஸ்லாம் விதி மீது நம்பிக்கை வைக்கச் சொன்னாலும், மனிதனின் முயற்சி இல்லாமல் வெற்றி கிடையாது என்பதை வலியுறுத்துகிறது.

ஒரு சமூகத்தின் நிலையை, அவர்கள் தங்களுள் உள்ளதை மாற்றாதவரை அல்லாஹ் மாற்றமாட்டான் (சூரா ரஅத் 13:11). இந்த வசனம், மனிதன் தனது நிலையை மாற்றுவதற்கு முதலில் முயற்சி செய்ய வேண்டும் என்பதைக் கூறுகிறது. இது முயற்சி திருவினை ஆக்கும் என்ற தமிழ் முதுமொழியின் இஸ்லாமிய வடிவமே ஆகும். முதலில் ஒட்டகத்தைக் கட்டிப் போட வேண்டும் பிறகு இறைவனிடம் துஆ கேட்க வேண்டும் .. என் இறைவனே நீ என் ஒட்டகத்தைப் பாதுகாத்துத் தருவாயாக! என்று பிரார்த்திக்க வேண்டும். முதலில் நம்முடைய முயற்சியை நாம் முன் வைக்க வேண்டும்.. இதையே கடமையைச் செய் என்கிறது கீதை... மேலும்,மனிதனுக்கு அவன் முயன்றதற்கே உரியது (சூரா நஜ்ம் 53:39) என்று குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது.

ஒருவரின் உழைப்பு, நேர்மை மற்றும் தொடர்ந்த முயற்சியின் அளவுக்கே அவருக்குப் பலன் கிடைக்கும் என்பதே இதன் கருத்து. இவ்வசனம், வெற்றி என்பது

வெறும் அதிர்ஷ்டம் அல்ல; மனித முயற்சியின் விளைவு என்பதை உணர்த்துகிறது. இதைத்தான்

*ஹதீஸ்களில் நபி முஹம்மது (ஸல்) அவர்கள், உன் ஒட்டகத்தைக் கட்டிவிட்டு அல்லாஹ்வை நம்பு என்று கூறியுள்ளார். இது, துஆவும் தவக்க குல்லும் (*Tawakkul*) (அல்லாஹ்வின் மீது நம்பிக்கை) மட்டும் போதாது; அதற்குத் துணையாக மனித முயற்சியும் அவசியம் என்பதை விளக்குகிறது. அதாவது, முதலில் செயல், பின்னர் அல்லாஹ்வின் உதவி. இது இஸ்லாமிய வாழ்க்கைத் தத்துவம். மேலும், இஸ்லாமில் ஸப்ர்* (Sabr - *பொறுமை) என்ற கருத்து மிக முக்கியமானது.*

குர்ஆன், நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான் (2:153) என்று கூறுகிறது. நீண்ட கால முயற்சி, சிரமங்களைத் தாங்கும் மனப்பாங்கு, தோல்விகளிலும் மனம் தளராத நிலை இவை அனைத்தும் முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும் என்ற வான்புகழ் வள்ளுவரின் கருத்தின் அடிப்படையாக விளங்குகின்றன. இஸ்லாமிய கருத்துப்படி, விதி என்பது மனிதனை செயலற்றவனாக்குவதற்காக அல்ல; முயற்சி செய்ய ஊக்குவிப்பதற்காகவே. மனிதன் முழு முயற்சியையும் செய்து, அதற்குப் பிறகு அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கையுடன் இருந்தால், அவருடைய முயற்சியே அவரது விதியை நல்வழிக்குத் திருப்பும். இவ்வகையில், இஸ்லாமிய தத்துவமும் முயற்சி திருவினை ஆக்கும் என்ற வள்ளுவரின் வாய்மொழியும் ஏறத்தாழ ஒரே வகையான உண்மையை வெளிப்படுத்துகின்றன.

சாதனையாளர்களின் சரித்திரங்கள் ..

முயற்சியால் முன்னேறியவர்களின் எண்ணிக்கை எண்ணில் அடங்கா.. உலக வரலாற்றையும் மனித நாகரிகத்தின் வளர்ச்சியையும் நோக்கினால், அனைத்துப் பெரிய சாதனைகளின் பின்னாலும் விடாமுயற்சி ஒளிந்திருப்பதைக் காணலாம். அறிவியல் கண்டுபிடிப்புகள், சமூக மாற்றங்கள், ஆன்மிகப் புரட்சிகள் ஆகியவை அனைத்தும் மனிதனின் தொடர்ந்த முயற்சியின் விளைவாகவே உருவானவையாகும்.

தனியுரிமை நாடாக இருந்த ஸ்காட்லாந்து இங்கிலாந்தின் ஆட்சிக்கு உட்பட்டபோது அதை மீட்கப் பலமுறை போர்புரிந்துத் தோல்வியுற்ற இராபர்ட்டு புரூஸ் என்ற ஸ்காட்லாந்து மன்னன் மனமுடைந்து ஒரு குகையில் உயிரைக் கையில் பிடித்தபடி ஒளிந்திருந்தபோது அங்கிருந்த ஒரு சிலந்தி, வலைபின்ன இயலாமல் பலமுறை கீழே விழுந்தது கண்டான். எனினும், தன் முயற்சியைக் கைவிடாமல் மேலும் மேலும் முயன்று இறுதியில் வலையைக் கட்டி முடித்து வெற்றியும் கண்டது. சிலந்தியின் செயலைக் கண்ணுற்ற இராபர்ட்டு புரூஸுக்கும் ஊக்கம் உருக்கொண்டது. மீண்டும் படைதிரட்டிச் சென்று போர் புரிந்து அவர் தனது நாட்டை மீட்டார்.

தென் ஆப்ரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா அவர்கள் இனவெறிக்கு எதிராகப் போராடியதற்காக 27 ஆண்டுகள் சிறையில் இருந்தாலும், தனது இலக்கில் இருந்து ஒருபோதும் அவர் விலகவில்லை; அவரது பொறுமையும். அதைத் தொடர்ந்த முயற்சியும் இறுதியில் அந்நாட்டின் முதல் கருப்பின அதிபராக உயரச் செய்தது.

அதுபோல், இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவர்டாக்டர் ஆ.ப.ஜெ.அப்துல் கலாம் அவர்கள் ஏழ்மையான பின்னணியில் பிறந்தாலும் தனது இடைவிடாத உழைப்பு, கல்வி மீதான ஆர்வம் மற்றும் கனவுகளை நம்பிய மனப்பாங்கு ஆகியவற்றின் மூலம் உலகம் போற்றும் விஞ்ஞானியாகவும் தலைவராகவும் உயர்ந்தார்.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் அபிரகாம் லிங்கன் அவர்கள் வாழ்க்கையில்

பல தோல்விகளைச் சந்தித்தபோதிலும், அரசியல் இலட்சியத்தை விடாமல் தொடர்ந்து முயன்றதன் விளைவாக அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியானார்.

பிறக்கும்போதே தந்தையை இழந்த சர்.தி. முத்துசாமி ஐயர் அவர்கள் தெரு விளக்கின் வெளிச்சத்தில் படித்துப் பட்டம் பெற்றதுடன் சட்டமும் பயின்று சென்னை உயர்நீதி மன் றத்தின் நீதிபதியாக விளங்கினார். ஆரம்பப் பள்ளிப் படிப்பு மட்டுமே படித்த ஜி.டி.நாயுடு அவர்கள் தம் முயற்சியினால் உலகம் வியக்கும் விஞ்ஞானியாக மாறியதோடு அரிய பல அறிவியல் கருவிகளைக் குறைந்த செலவில் தயாரிக்கலாம் என்று நிரூபித்துக் காட்டினார்.

அந்தகராய்ப் பிறந்த வீரராகவர் தம் முயற்சியால் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேர்ந்ததுடன் கவிபாடும் ஆற்றலையும் பெற்றார். மன்னர்களையும் வள்ளல்களையும் பாடி மகிழ்வித்துப் பரிசில்களையும் பெற்ற அவர் தம்மைப் பற்றி ‘‘ஏடாயிரங் கோடி எழுதாது தன் மனத்துள் எழுதிப் படித்த விரகன்,. ‘‘பார்வைஇல்லாதவர்’’ என்ற இகழ்ச்சியை அவரது முயற்சியால் போக்கியதுடன் ‘‘கவிஞர்’’ என்ற புகழ்ச்சியையும் பெற்றுச் சிறந்தார். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பதைக் கவிராயர் மெய்ப்பித்து விட்டார்.

பீமாராவ் அம்பேத்கர் தம் அரிய முயற்சியினால் மேல்நாடு சென்று கல்விக் கற்று சட்ட வல்லுனராய் விளங்கியதுடன் நம் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தைத் தொகுத்தளித்து இந்திய வரலாற்றில் அழியா இடம் பெற்றார். டாக்டர் அம்பேத்கர் ஆனார்.

இவ்வாறு உலகின் பல தலைவர்களின் வாழ்க்கையில், வெற்றி என்பது திடீர் அதிர்ஷ்டம் அல்ல; தொடர்ந்த முயற்சி, தன்னம்பிக்கை மற்றும் நேர்மையான உழைப்பின் பயன் என்பதை உணர்த்துகிறது. ஜெர்மனியின் முன்னாள் அதிபர் ஆஞ்சலா மெர்கல் அவர்கள் அறிவியல் பின்னணியிலிருந்து அரசியலுக்குள் வந்து, கடினமான சூழ்நிலைகளிலும் தைரியமான முடிவுகளை எடுத்து ஐரோப்பாவின் சக்திவாய்ந்த தலைவர்களில் ஒருவராக உருவெடுத்தார். அவரது அமைதியான, ஆனால் உறுதியான முயற்சி, உலக அரசியலில் அவருக்கென ஒருதனி இடத்தை உருவாக்கியது. அதேபோல், பிரிட்டனின் முன்னாள்பிரதமர்வின்ஸ்டன்சர்ச்சில்அவர்கள் இளமையில் கல்வியிலும் அரசியலிலும் பல தோல்விகளைச் சந்தித்தாலும், இரண்டாம் உலகப் போரின் கடுமையான காலகட்டத்தில் தன்னம்பிக்கையையும் உறுதியான முயற்சியையும் இழக்காமல் நாட்டை வழிநடத்தினார். அவரது விடாமுயற்சியும் ஊக்கமளிக்கும் பேச்சுகளும், மக்களின் மனதில் நம்பிக்கையை விதைத்தன.

ஆசிய நாடுகளில், சிங்கப்பூரின் நிறுவனர் லி குவான் யூ அவர்கள் வளங்கள் குறைந்த ஒரு சிறிய தீவு போன்ற நாட்டை திட்டமிட்ட முயற்சி, கட்டுப்பாடு மற்றும் நீண்டகாலப் பார்வையுடன் உலகின் முன்னேறிய நாடுகளில் ஒன்றாக மாற்றினார். இன்று நம் நாடு முழு உரிமை பெற்ற குடியரசு நாடாகத் திகழ்கிறது என்றால் அதற்கு நம் தேசத்தந்தை அண்ணல் காந்தியடிகள் மேற்கொண்ட முயற்சியே காரணம்.